மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்
சிறப்பு சார்பு நீதிமன்றம் (MACT), தருமபுரி.
முன்னிலை திருமதி.S.விபிசி, M.L.,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT), தருமபுரி,

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10 ம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீ விசுவாவசு வருடம் ஆவணி மாதம் 25 ம் நாள்

CNR.No.TNDP 0C-000633-2023

எம்.சி.ஓ.பி.எண் : 294/2023

பாலு ... மனுதாரர்

/எதிர் /

1. சுரேந்தர்
2. ஓரியண்டல் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், தருமபுரி. ... எதிர்மனுதாரர்கள்

(a)	இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி:	பாலு, த/பெ. தர்மலிங்கம், வயது 62, க.எண்.7, F பிளாக், டெவலப்மென்ட் காலணி, கிருஷ்ணகிரி மெயின் ரோடு, தருமபுரி தாலுகா மற்றும் மாவட்டம்.
(b)	எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி:	1. S. சுரேந்தர், த/பெ. சேகர், க.எண்.64/136, பிளாக் டெவலப்மென்ட் கலாணி, தருமபுரி தாலுகா, தருமபுரி மாவட்டம். 2. தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், எண்.13, தருமபுரி மெயின் ரோடு, பென்னாகரம் அஞ்சல், தருமபுரி மாவட்டம்.
(c)	பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி:	தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், எண்.13, தருமபுரி மெயின் ரோடு, பென்னாகரம் அஞ்சல், தருமபுரி மாவட்டம்.
(d)	மாநகர போக்குவரத்து கழகம் (அ) இதர இழப்பீடு தொகை செலுத்தத்தக்க எதிர்மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி:	இம்மனுவிற்கு பொருந்தத்தக்கதல்ல
(e)	இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி	27.03.2023
(f)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட	10.09.2025

S VIPICEE

Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:03 -0800

	தேதி	
(g)	பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம்	**ரூ. 2,77,000/–** (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தி ஏழாயிரம் மட்டும்)
(h)	வட்டி விகிதம்	7.5%
(i)	எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும்	27.03.2023
(j)	செலவுத்தொகை விபரம் ஏதாவது இருப்பின்:	பிராசஸ் கட்டணம் ரூ. 18.00 ஆவணங்களின் மீதான முத்திரை கட்டணம் ரூ. 40.00 வக்காலத்திற்கான முத்திரை கட்டணம் ரூ. 10.00 நீதிமன்ற கட்டணம் ரூ. 2,142.50 வழக்கறிஞர் கட்டணம் ரூ. 17,350.00 தட்டச்சு கட்டணம் ரூ. 100.00 மொத்தம் ரூ. 19,660.50
(k)	உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம்	2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை முழுவதையும் வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வைப்பீடு செய்ய வேண்டும்.
(l)	மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம்	பொருந்தத்தக்கதல்ல
(m)	இழப்பீட்டு தொகை எதன் மூலமாக, எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும்	இழப்பீட்டு தொகையை இந்நீதிமன்றத்திற்கான வங்கி கணக்கு எண் தருமபுரி மாவட்டம், ஸ்டேட் பாங்க் ஆப்

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:10 -0800

	என்பது சம்பந்தமான விபரம்	இந்தியா பிரதான கிளை VAN Collection No. SSJDP1MCOP2942023, IFSC Code: SBIN0004266 என்ற கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்.
(n)	இழப்பீட்டு தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம்	2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை முழுவதையும் வைப்பீடு செய்த பின்பு மனுதாரர் இழப்பீட்டு தொகையை முழுவதையும் உடனடியாக எடுத்துக்கொள்ள அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
(o)	எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின்	இல்லை
(p)	இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம்	**₹. 372.50**
(q)	உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரு வாரங்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம்	**₹. 1,770/-**
(r)	திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம்	இல்லை

இந்த மனு முதலில் கடந்த 03.07.2023ம் தேதியன்று மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம் தருமபுரியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதன் பின்னர் மாண்பமை முதன்மை மாவட்ட நீதிபதி, தருமபுரி அவர்களின் கடித எண்.661/2023, நாள்.01.09.2023 தேதிய ஆணைப்படி இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, இந்த வழக்கு இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.N.தினகரன் அவர்கள் முன்னிலையாகியும்,

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:15 -0800

1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.நேரு அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.கல்பனா அவர்கள் முன்னிலையாகியும் வழக்காடியதில் இரு தரப்பு சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்த தீர்ப்பாயம் வழங்கும்

உத்தரவு

15.02.2023 ஆம் தேதியில் நடந்த சாலை விபத்தில் காயமடைந்த மனுதாரர் இழப்பீடாக ரூ.10,00,000/– கோரி இம்மனுவை மோட்டார் வாகன சட்டப் பிரிவு 166–ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2) மனுவின் சாராம்சம்:

கடந்த 15.02.2023ம் தேதி இரவு சுமார் 08.20 மணியளவில் மனுதாரர் தருமபுரி தேசிய நெடுஞ்சாலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக மண் ரோட்டில் மேற்கு ஓரமாக வண்ணியர் கல்யான மண்டபம் பிரிவு ரோடு அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது மனுதாரருக்கு பின்னால் TN.29.CA.9789 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தினால் மனுதாரருக்கு இடது கையில் எலும்பு முறிவும், இடது கால் பாதத்தில் நசுங்கிய காயமும், முகத்தில் பல்வேறு இடங்களில் ரத்தக்காயமும், இரண்டு பற்கள் விழுந்தும் மற்றும் உடல் முழுவதும் பல்வேறு காயங்களும் ஏற்பட்டுள்ளது. உடனடியாக மனுதாரர் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு மேற்சிகிச்சைக்காக தருமபுரி ஸ்ரீ சாய் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றுள்ளார். பின்னர் தனியார் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை பெற்று வருகிறார். விபத்தினால் மனுதாரருக்கு நிரந்தர ஊனமும், வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தானது TN.29.CA.9789 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:21 -0800

ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் அவர் மீது தருமபுரி காவல் நிலையத்தில் குற்ற எண்.84/2023 சட்டப்பிரிவுகள் 279, 337 இ.த.ச. படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்தின் போது மனுதாரரின் வயது 62. விபத்திற்கு முன்பாக மனுதாரர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் திடகாத்திரமாக இருந்து சொந்தமாக சரக்கு வாகனங்களில் சரக்கு மூட்டைகளை ஏற்றி இறக்கும் வேலை செய்து மாதம் ரூ.20,000/-க்கு மேல் சம்பாதித்து வந்தார். 1ம் எதிர்மனுதார் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளராவார். 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு காப்பீடு வழங்கிய நிறுவனம் ஆகும். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையே காரணம் என்பதால் எதிர்மனுதாரர்கள் இருவரும் தனியாகவோ அல்லது கூட்டாகவோ மனுவில் கோரிய இழப்பீட்டுத் தொகையை செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

<u>3) 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கது அல்ல. பொய்யான சங்கதிகளை கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் 1ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டதை தவிர மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். விபத்து ஏற்பட்ட விதம் குறித்தும், அதற்கான காரணம் குறித்தும் மனுவில் கூறியவை மறுக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரர் விபத்தின் போது இருசக்கர வாகனத்தை மெதுவாகவும், போக்குவரத்து விதிகளை பின்பற்றியும் ஓட்டி சென்றுள்ளார். அப்போது மனுதாரர் இருசக்கர வாகனம் வருவதை கவனிக்காமல் திடீரென ரோட்டை தவறாக கடந்துள்ளார். இதை பார்த்த 1ம் எதிர்மனுதாரர் அவரது வண்டியை பிரேக் போட்டு நிறுத்தியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தானாகவே இருசக்கர வாகனத்தில் இடித்து கீழே விழுந்து விபத்தை வரவழைத்துள்ளார். இந்த விபத்திற்கு மனுதாரரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையே காரணம் ஆகும். மனுதாரர் இழப்பீடு பெற வேண்டி காவல் துறையினரை செல்வாக்கின்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:27 -0800

அடிப்படையில் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்ய வைத்துள்ளார். விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரரின் இருசக்கர வாகனம் 2ம் எதிர்மனுதாரரிடம் செய்திருந்த காப்பீடு அமுலில் உள்ளது. விபத்திற்காக 1ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த வேண்டும் என்றிருந்தால் 1ம் எதிர்மனுதாரருக்காக 2ம் எதிர்மனுதாரரே இழப்பீடு செலுத்த கடமைப்பட்டுள்ளார். மனுதாரருக்கு சாதாரண காயங்களே ஏற்பட்டுள்ளது. கோரியுள்ள இழப்பீட்டு தொகை மற்றும் வட்டி அதிகமானது. மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

<u>4) 2ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கது அல்ல. பொய்யான சங்கதிகளை கொண்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் 2ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டதை தவிர மற்ற அனைத்தையும் மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். விபத்து சமயத்தில் 1–ம் எதிர்மனுதாரரின் வாகனம் முறையான ஆவணங்கள் இன்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. விபத்து ஏற்பட்ட தேதி, நேரம், இடம் மற்றும் விபத்து ஏற்பட்ட விதம் குறித்து மனுவில் கூறியவை மறுக்கப்படுகிறது. கடந்த 15.02.2023ம் தேதி இரவு சுமார் 08.20 மணியளவில் 1ம் எதிர்மனுதாரர் அவரது இருசக்கர வாகனத்தை தருமபுரி – சேலம் ரோட்டில் வண்ணியர் திருமண மண்டபம் பிரிவு ரோடு அருகே மெதுவாகவும், கவனமாகவும், போக்குவரத்து விதிகளை பின்பற்றியும் ஓட்டிச் சென்று கொண்டிருந்த போது மனுதாரர் வாகனங்கள் வருவதை கவனிக்காமல் திடீரென கவனக்குறைவான முறையில் ரோட்டை கடக்க முயற்சித்து 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மீது இடித்து மனுதாரர் தானாக கீழே விழுந்து சாதாரண காயங்கள் ஏற்பட்டுள்ளது. இந்த விபத்திற்கு மனுதாரரே காரணம் ஆவார். மனுதாரரின் செல்வாக்கின் பேரில் காவல் நிலையத்தில் பொய்யான சங்கதிகளை கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரருக்கு சாதாரண காயங்களே

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:34 -0800

ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்டதாக சொல்லும் காயங்கள், அதற்கு அவர் மேற்கொண்ட சிகிச்சைகள், அதற்கு ஏற்பட்ட செலவினம் ஆகியவை குறித்து மறுக்கப்படுகிறது. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனருக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் இல்லை. நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை. கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மற்றும் வட்டி அதிகமானது. மேற்சொன்ன காரணங்களால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

5) மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மோட்டார் வாகன சட்டப்பிரிவு 170ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

6) <u>இம்மனுவில் ஆராய வேண்டிய பிரச்சினை யாதெனில்</u> :

1. விபத்திற்கு TN.29.CA.9789 வாகன ஓட்டுனரின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் காரணமா?
2. மனுதாரர் இழப்பீடு கோர உரிமை உடையவரா?
3. மனுதாரருக்கு எதிர்மனுதாரர்கள் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்களா?
4. மனுதாரருக்கு வழங்க வேண்டிய இழப்பீடு தொகை எவ்வளவு?
5. மனுதாரருக்கு கிடைக்கும் இதர பரிகாரங்கள் யாவை?

7) <u>பிரச்சினை எண் 1 க்கான தீர்வு :</u>

7.1) இம்மனு 15.02.2023ம் தேதியில் நடந்த விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு கோரி மோட்டார் வாகன சட்டப்பிரிவு 166ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரிவின் படி மனுதாரர் இழப்பீடு கோர வேண்டுமானால் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனரின் கவனகுறைவை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட Oriental Insurance Co. Ltd vs Premlata Shukla & Ors 2007 ACJ 1928 என்ற முன்தீர்ப்பில் கீழ்கண்டவாறு உள்ளது.

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:40 -0800

The insurer, however, would be liable to re-imburse the insured to the extent of the damages payable by the owner to the claimants subject of course to the limit of its liability as laid down in the Act or the contract of insurance. Proof of rashness and negligence on the part of the driver of the vehicle, is therefore, sine qua non for maintaining an application under Section 166 of the Act.

7.2) இதுகுறித்து மாண்புமிகு சென்னை உச்சநீதிமன்றத்தால் வழுங்கப்பட்ட Shriram General Insurance Company Ltd. Vs. S. Padmini 2014 2 TNMAC 521 என்ற முன்தீர்ப்பில் கீழ்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

In an application filed under Section 166, claiming compensation, it is necessary for a claimant to prove negligence on the part of the driver or owner of the vehicle. The burden is on the claimant to establish the negligence on the part of the driver or owner of the vehicle and on proof thereof, the claimant is entitled to compensation.

7.3) மேற்படி முன்தீர்ப்புகளை பார்க்கும்போது விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனரின் கவனகுறைவை மனுதாரர் நிரூபிக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது. எனவே இம்மனுவில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு, அஜாக்கிரதையை நிரூபித்துள்ளாரா என காண வேண்டியுள்ளது.

7.4) விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான இம்மனுவின் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது அவரது சாட்சியத்தில் கடந்த 15.02.2023ம் தேதி இரவு சுமார் 08.20 மணியளவில் மனுதாரர் தருமபுரி தேசிய நெடுஞ்சாலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக மண் ரோட்டில் மேற்கு ஓரமாக வண்ணியர் கல்யாண மண்டபம் பிரிவு ரோடு அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது மனுதாரருக்கு பின்னால் TN.29.CA.9789 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:47 -0800

7.5) மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் மனுக்களில் மனுதாரர் தங்களது வழக்கை சாத்தியக் கூறுகளின் மேம்பட்ட நிலை மூலம் நிரூபித்தால் போதுமானது என நமது மாண்புமிகு உச்சநீதிமன்றம் 2009 ACJ 1725 (AC) Bimla Devi Vs Himachal Road Transport Corporation and Others என்ற முன்தீர்ப்பில் கூறியுள்ளது.

7.6) மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட ம.சா.1 இந்த விபத்திற்கு TN.29.CA.9789 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவுதான் காரணம் என சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மனுதாரர் தரப்பில் விபத்து குறித்து காவல் துறையினர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தைப் பார்க்கையில் விபத்தானது TN.29.CA.9789 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் நடைபெற்றதாக காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து செய்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

7.7) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்று ஆட்சேபனை செய்திருப்பினும் அவற்றை உண்மையென நிரூபணம் செய்ய ஏதுவாக அது குறித்து சாட்சியமளிக்க தகுதி வாய்ந்த நபர்களான இந்த விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை.

7.8) இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுனரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை தான் காரணம் என ம.சா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையானது 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட நிலையிலும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுனர் இந்த விபத்திற்கு எவ்வகையிலும்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:20:53 -0800

காரணம் அல்ல என்பதை காண்பிக்கும் பொருட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித நேரடி சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

7.9) எனவே, மனுதாரர் தரப்பு சாட்சிய சான்றாவணங்களின் படி விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனகுறைவு, அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளது என்பது மனுதாரர் தரப்பில் சாத்தியக் கூறுகளின் மேம்பட்ட நிலை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. அவ்வாறே இப்பிரச்சினைக்கு மனுதாரருக்கு சாதகமாக தீர்வு காணப்படுகிறது.

8) <u>பிரச்சினை எண். 3, 4 க்கான தீர்வு :</u>

8.1) ம.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 15.02.2023ம் தேதி இரவு சுமார் 08.20 மணியளவில் மனுதாரர் தருமபுரி தேசிய நெடுஞ்சாலையில் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி ரோட்டின் இடதுபுற ஓரமாக மண் ரோட்டில் மேற்கு ஓரமாக வண்ணியர் கல்யாண மண்டபம் பிரிவு ரோடு அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது மனுதாரருக்கு பின்னால் TN.29.CA.9789 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் மனுதாரருக்கு இடது கையில் எலும்பு முறிவும், இடது கால் பாதத்தில் நசுங்கிய காயமும், முகத்தில் பல்வேறு இடங்களில் ரத்தக்காயமும், இரண்டு பற்கள் விழுந்தும் மற்றும் உடல் முழுவதும் பல்வேறு காயங்களும் ஏற்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை, ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.3 விடுவிப்பு அறிக்கை மற்றும் ம.சா.ஆ.8 காயச்சான்றிதழ் ஆகியவற்றில் இருந்து கடந்த 15.02.2023ம் தேதியன்று மனுதாரருக்கு சாலை விபத்து ஏற்பட்டு அதனால் அவருக்கு காயங்கள் ஏற்பட்டிருப்பது தெரிய வருகிறது.

8.2) ம.சா.1ன் சாட்சியம் மற்றும் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3, ம.சா.ஆ.8 சான்றாவணங்களில் இருந்து மனுதாரருக்கு சாலை விபத்தினால் காயங்கள்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:00 -0800

ஏற்பட்டிருப்பது நிரூபணமாகிறது. மனுதாரர் விபத்தினால் காயம்பட்ட நபர் என்பதால் இழப்பீடு கோர உரிமையுடையவர். இந்நிலையில் மனுதாரருக்கான இழப்பீட்டை எதிர்மனுதாரர்கள் செலுத்த கடமைப்பட்டவர்களா என்பதை காண வேண்டியுள்ளது. மனுதாரர் தரப்பில் விபத்து ஏற்படுத்திய TN.29.CA.9789 என்ற வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அந்த வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் 1ம் எதிர்மனுதாரர் பெயரில் காப்பீடு வழங்கியுள்ளது என்றும் மனுவில் கூறி அதன்படி ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

8.3) விபத்தை ஏற்படுத்திய TN.29.CA.9789 என்ற வாகனத்தின் உரிமையாளர் 1ம் எதிர்மனுதாரர் என்று ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையிலும், ம.சா.ஆ.5 பதிவு சான்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக இதிலிருந்து விபத்தில் சம்பந்தபட்ட TN.29.CA.9789 என்ற வாகனத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் உரிமையாளர் என்பதும், இந்த வாகனத்திற்கு 08.12.2022 முதல் 07.12.2027 வரை அதாவது விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனருக்கு செல்லத்தக்க ஓட்டுனர் உரிமம் விபத்து சமயத்தில் இருப்பது ம.சா.ஆ.7 ஓட்டுனர் உரிமம் மற்றும் ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கை ஆகியவற்றில் இருந்து தெரிய வருகிறது.

8.4) மேலும், காப்பீடு விதிமுறை மீறிய செயலை உரிய சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. விபத்து தேதியன்று 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் செய்த காப்பீடானது அமுலில் இருப்பது ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் இருந்து தெரிய வருகிறது. எனவே இவ்வழக்கில் காப்பீடு விதிமுறை மீறிய செயல் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் நிரூபிக்கப்படாத நிலையில் மனுதாரருக்கான இழப்பீட்டை 2ம் எதிர்மனுதாரர் செலுத்த கடமைப்பட்டவர் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. அவ்வாறே இப்பிரச்சனைகளுக்கு மனுதாரருக்கு சாதகமாக தீர்வு காணப்படுகிறது.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:05 -0800

9) <u>பிரச்சனை எண்.4 க்கான தீர்வு :</u>

9.1) விபத்தில் காயம்பட்ட நபர் இழப்பீடு கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களில் எந்தெந்த தலைப்பின் கீழ் இழப்பீடு வழங்கலாம் என்பது குறித்து நமது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2010 (2) TNMAC 581 RajKumar Vs Ajaykumar and another என்ற முன்தீர்ப்பில் கீழ்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

9 (a). The heads under which compensation is awarded in personal injury cases are the following :

Pecuniary damages (Special Damages)

(i) Expenses relating to treatment, hospitalization, medicines, transportation, nourishing food, and miscellaneous expenditure.

(ii) Loss of earnings (and other gains) which the injured would have made had he not been injured, comprising :

(a) Loss of earning during the period of treatment;

(b) Loss of future earnings on account of permanent disability.

(iii) Future medical expenses.

Non-pecuniary damages (General Damages)

(iv) Damages for pain, suffering and trauma as a consequence of the injuries.

(v) Loss of amenities (and/or loss of prospects of marriage).

(vi) Loss of expectation of life (shortening of normal longevity). In routine personal injury cases, compensation will be awarded only under heads (i), (ii)(a) and (iv). It is only in serious cases of injury, where there is specific medical evidence corroborating the evidence of the claimant, that compensation will be granted under any of the heads (ii)(b), (iii), (v) and (vi) relating to loss of future earnings on account of permanent disability, future medical expenses, loss of amenities (and/or loss of prospects of marriage) and loss of expectation of life. Assessment of pecuniary damages under item (i) and under item (ii)(a) do not pose much difficulty as they involve reimbursement of actuals and are easily

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:11 -0800

ascertainable from the evidence. Award under the head of future medical expenses - item (iii) -- depends upon specific medical evidence regarding need for further treatment and cost thereof. Assessment of non-pecuniary damages - items (iv), (v) and (vi) -- involves determination of lump sum amounts with reference to circumstances such as age, nature of injury/deprivation/disability suffered by the claimant and the effect thereof on the future life of the claimant. Decision of this Court and High Courts contain necessary guidelines for award under these heads, if necessary. What usually poses some difficulty is the assessment of the loss of future earnings on account of permanent disability - item (ii)(a). We are concerned with that assessment in this case. Assessment of future loss of earnings due to permanent disability

9.2) மேற்படி மாண்பமை உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதல் அடிப்படையில் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. இவ்வழக்கில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட போது தனது சாட்சியத்தில் விபத்தினால் இடது கையில் எலும்பு முறிவும், இடது கால் பாதத்தில் நசுங்கிய காயமும், முகத்தில் பல்வேறு இடங்களில் ரத்தக்காயமும், இரண்டு பற்கள் விழுந்தும் மற்றும் உடல் முழுவதும் பல்வேறு காயங்களும் ஏற்பட்டதாகவும், அதற்காக தருமபுரி ஸ்ரீ சாய் மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற்றுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

9.3) ம.சா.ஆ.2 விபத்து பதிவேடு, ம.சா.ஆ.8 காயச்சான்றிதழ் மற்றும் ம.சா.ஆ.3 விடுவிப்பு அறிக்கை ஆகியவற்றை பரிசீலிக்கையில் இந்த விபத்தினால் மனுதாரருக்கு கொடுங்காயம் ஏற்பட்டிருப்பதும், விபத்து ஏற்பட்டவுடன் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றுக் கொண்டு மேல் சிகிச்சைக்காக ஸ்ரீ சாய் மருத்துவமனையில் 16.02.2023 முதல் 18.02.2023 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருப்பதும், அங்கு FRACTURE BOTH BONES LEFT FOREARM என்ற

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:16 -0800

காயத்திற்காக 16.02.2023ம் தேதி OPEN REDUCTION AND INTERNAL FIXATION WITH ADCP PLATES AND SCREWS FOR RADIUS FOR ULNA என்ற அறுவை சிகிச்சை செய்திருப்பதும் தெரியவருகிறது.

9.4) மனுதாரருக்கு மேற்படிவீதம் ஏற்பட்ட காயங்கள் மற்றும் மருத்துவ சிகிச்சைகளை கருத்தில் கொண்டு வலி மற்றும் வேதனைக்காக ரூ.50,000/- வழங்கலாம் எனவும், விபத்து காயத்தினால் மனுதாரருக்கு ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டு வசதி இழப்பிற்காக ரூ.20,000/- வழங்கலாம் எனவும் இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

9.5) மேலும் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக மேற்படிவீதம் மேற்கொண்ட சிகிச்சைக்காக ஐந்து மாதம் ஓய்வு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். எனவே, மனுதாரருக்கு ஐந்து மாத வருமானத்திற்கான இழப்பீடு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. மனுதாரர் விபத்து சமயத்தில் சுமை தூக்கும் வேலை செய்து மாதம் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததாக மனுவில் கூறி அதன்படி ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார்.

9.6) விபத்தின் போது மனுதாரரின் வயது 62 என மனுவில் கூறி அதன்படி ம.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரரின் பிறந்த தேதி 22.01.1960 என ம.சா.ஆ.6 ஆதார் அட்டையில் கண்டுள்ளது. எனவே, விபத்தின்போது மனுதாரரின் வயது 63 என இந்த தீர்ப்பாயம் எடுத்துக்கொண்டு விபத்து ஏற்பட்டது 2023ம் ஆண்டு என்பதை கருத்தில் கொண்டு மனுதாரர் குறைந்தபட்சம் மாதம் ரூ.11,000/- வருமானம் ஈட்டக்கூடும் என தோராயமாக இந்த தீர்ப்பாயம் நிர்ணயம் செய்கின்றது. எனவே, ஐந்து மாத வருமான இழப்பாக ரூ.55,000/- மனுதாரருக்கு வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

9.7) விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை மேற்கொண்டதற்கான செலவினங்கள் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த பில்கள் குறித்து 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்திருப்பினும் அந்த பில்கள் போலியானது என்பதை காண்பிக்க

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:22 -0800

எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. ம.சா.ஆ.9 யை பரிசீலிக்கையில் இந்த பில்கள் குறித்து சந்தேகிக்கும் வகையில் எதுவும் இல்லை. ஆதலால் இந்த பில்களில் கண்ட தொகை ரூ.86,896/– மனுதாரருக்கு மருத்துவ செலவினம் என்ற தலைப்பின் கீழ் கிடைக்கத்தக்கது ஆகும். விபத்தினால் மனுதாரருக்கு எதிர்கால மருத்துவ செலவு இருப்பது குறித்து மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆதலால் அதற்கான இழப்பீடு தொகை எதுவும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது அல்ல.

9.8) மேலும் விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனத்தை நிர்ணயம் செய்ய மனுதாரர் மருத்துவ குழுமம் முன்பு ஆஜராகி பெற்ற ஊனச் சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் மனுதாரருக்கு 6% ஊனம் ஏற்பட்டதாக மருத்துவ குழுமம் சான்றிதழ் வழங்கியுள்ளது தெரிய வருகிறது. மேற்படி ஊனம் வருவாயை இழக்க செய்யும் அளவிற்கு உள்ளது என்பது மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. எனவே மேற்படி ஊனம் வருவாயை இழக்க செய்யும் ஊனம் இல்லை என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. இதுகுறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட Iffco Tokio General Insurance Co. Ltd Vs. Venkatesh and others 2022 (1) TNMAC 299 என்ற முன்தீர்ப்பில் கீழ்கண்டவாறு சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

> 9 (b). The Tribunal referred the 1st respondent to the Medical Board and the Medical Board after examining the 1st respondent, certified that the 1st respondent suffered 45% disability. There is nothing on record to show that the 1st respondent suffered functional disability and that he could not do the work as he was doing earlier. The 1st respondent has not proved that he suffered functional disability. The Tribunal adopted multiplier method accepting the contention of the learned counsel appearing for the 1st respondent that the 1st respondent is unable to earn as he was earning earlier and his income is reduced.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:27 -0800

The multiplier method adopted by the Tribunal is not correct. Unless acceptable evidence is placed before the Tribunal to prove that the 1st respondent suffered functional disability and could not do the work as he was doing earlier, the Tribunal cannot adopt multiplier method to award compensation towards loss of earning capacity.

9.9) எனவே பெருக்கல் குறியீட்டின் அடிப்படையில் ஊனத்திற்கான இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. இந்நிலையில் Future General India Insurance vs Manivannan on 15 June, 2022, 2024 (1) TN MAC 598 (DB) என்ற முன்தீர்ப்பு வழக்கில் மாண்பமை மேலமை நீதிமன்றம் பாரா 13 ல் பின்வருமாறு கூறியுள்ளது.

13. ......This Court by judgment dated 09.01.2020 made in C.M.A.No.4870 of 2020 in the case of M/s.IFFCO TOKIO General Insurance Company Limited vs. Venkatesh and another), fixed a sum of Rs.4,000/- per percentage of disability for the accident occurred in the year 2014 & 2015 and a sum of Rs.5,000/- per percentage of disability for the accident occurred from the year 2016 on wards, due to raise in cost of living. In the present case, the accident is of the year 2017. In view of the same, a sum of Rs.7,000/- is awarded per percentage of disability, due to a raise in cost of living......"

9.10) மேலே சொல்லப்பட்ட முன்தீரப்பில் மாண்பமை மேலமை நீதிமன்றமானது 2017 ம் வருடத்தில் ஏற்பட்ட விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.7,000/- வழங்கியுள்ளது. இந்த வழக்கு விபத்து ஏற்பட்டது 2023 ஆம் ஆண்டு என்பதை கருத்தில் கொண்டும், விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டும் 1% ஊனத்திற்கு ரூ.8,000/- அளிக்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதி அதன் அடிப்படையில் மனுதாரருக்கு ஏற்பட்ட 6% ஊனத்திற்காக 6 x ரூ.8,000 = ரூ.48,000/- ஊனத்திற்கான இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது.

9.11) மேலும் மனுதாரருக்கு 15.02.2023 ம் தேதியில் நடந்த விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பொழுது ஒரு நபர்

S VIPICEE Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:33 -0800

மனுதாரரை உடனிருந்து கவனித்திருக்க வேண்டும். மனுதாரர் மருத்துவமனையில் உள்நோயளியாக கடந்த 16.02.2023 முதல் 18.02.2023 வரையிலும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதை கருத்தில் கொண்டு உடனிருந்தோர் செலவுத் தொகையாக ரூ.2,000/– வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. மனுதாரருக்கு ஊட்டச்சத்து செலவிற்காக ரூ.10,000/– வழங்கலாம் எனவும், போக்குவரத்து செலவிற்காக ரூ.3,000/– வழங்கலாம் எனவும், ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் சேதத்திற்கு ரூ.2,000/– வழங்கலாம் எனவும் இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. மேற்கண்ட விவாதங்களின்படி மனுதாரருக்கு கீழ்க்கண்ட இழப்பீடுகள் கிடைக்கக்கூடியது என்று தீர்ப்பாயம் கருதுகிறது.

வ.எண்	**இழப்பீட்டிற்கான தலைப்புகள்**	**தொகை விபரம்**	
1	வலி மற்றும் வேதனைக்காக	ரூ.	50,000
2	வசதி இழப்பிற்காக	ரூ.	20,000
3	வருமான இழப்பிற்காக	ரூ.	55,000
4	ஊனத்திற்கான இழப்பீடாக	ரூ.	48,000
5	உடனிருந்தோர் செலவுத் தொகையாக	ரூ.	2,000
6	ஊட்டச்சத்து செலவிற்காக	ரூ.	10,000
7	போக்குவரத்து செலவிற்காக	ரூ.	3,000
8	ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் சேதத்திற்காக	ரூ.	2,000
9	மருத்துவ செலவினத்திற்காக	ரூ.	86,896
	மொத்தம்	**ரூ.**	2,76,896
	Rounded to	**ரூ.**	2,77,000

9.12) மனுதாரருக்கு இழப்பீடாக **ரூ.2,77,000/–**ம் 7.5% வட்டியுடன் கிடைக்கத்தக்கது என்று இந்த தீர்ப்பாயம் கருதுகிறது. அவ்வாறே பிரச்சனை எண்.4 க்கு மேற்படிவீதம் தீர்வு காணப்படுகிறது.

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:38 -0800

10) <u>பிரச்சனை எண்.5 க்கான தீர்வு :</u>

மனுதாரருக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று பிரச்சனை எண்.5 க்கு தீர்வு காண்கிறது.

11) இறுதியாக, இம்மனு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மனுதாரருக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டு தொகை **ரூ.2,77,000/-** (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) மனுதாக்கல் தேதியிலிருந்து தொகை வசூலாகும் தேதிவரை ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டியுடன் (மனு தள்ளுபடியாகி இருப்பின் மேற்படிகாலம் நீங்கலாக) இம்மனுவின் செலவுத்தொகை ரூ.19,660.50 சேர்த்து இன்றிலிருந்து முப்பது நாட்களுக்குள் தருமபுரி மாவட்டம், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா பிரதான கிளை இந்நீதிமன்றத்தின் வங்கி கணக்கு எண் VAN Collection No.SSJDP1MCOP2942023, IFSC Code: SBIN0004266 என்ற கணக்கில் NEFT/RTGS முறையில் நேரடியாக வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்திய பின்பு 2ம் எதிர்மனுதாரர் வங்கி அறிவுறுத்தலின் நகல் (Copy of Bank advice) ஒன்றை இத்தீர்ப்பாயத்திற்கும், அதன் மற்றொரு நகலை மனுதாரர் அல்லது அவரது வழக்கறிஞருக்கும் அனுப்பவும் உத்தரவிடப்படுகிறது. மேற்படி தொகை மற்றும் மனுதாரரின் செலவுத்தொகை மற்றும் மொத்த தொகைக்கான வட்டி ஆகியவைகள் செலுத்தப்பட்டவுடன் உடனடியாக மேற்படி தொகைகளை மனுதாரர் பெற்றுக் கொள்ளலாம் எனவும், மனுதாரர் இத்தீர்ப்பாயத்தை அணுகி மனு தாக்கல் செய்து மேற்படி மனுதாரருக்கான இழப்பீட்டு தொகையை மனுதாரர் வங்கி கணக்கில் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. பற்றாக்குறை நீதிமன்ற கட்டணம் ரூ.1,770/- இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்தவும் உத்தரவிடப்படுகிறது. அவ்வாறு செலுத்தத் தவறும் பட்சத்தில் இவ்வுத்தரவு நிறைவேற்றுதற்குரியது அல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் கட்டணம் ரூ.17,350/- என நிர்ணயம் செய்யப்படுகிறது. 2020(4) CTC 272, M/s.சோழமண்டலம் MS ஜெனரல்

S VIPICEE
Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:45 -0800

இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் எதிர் அய்யனார் மற்றும் பலர் என்ற மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை பின்பற்றி இவ்வழக்கில் தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. மோட்டார் வாகனச் சட்டம் பிரிவு 168(2)ன் படி இந்த உத்தரவின் நகலை வழக்கு தரப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரி பார்க்கப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S VIPICEE

Digitally signed by S VIPICEE
Date: 2025.09.10 13:21:50 -0800

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிபதி, தருமபுரி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி :</u>

ம.சா.1 – பாலு

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :</u>

வ.எண்	**ஆவணம்**	**தன்மை**
ம.சா.ஆ.1	முதல் தகவல் அறிக்கை	நகல்
ம.சா.ஆ.2	மனுதாரரின் விபத்து பதிவேடு	நகல்
ம.சா.ஆ.3	மனுதாரரின் விடுவிப்பு அறிக்கை	நகல்
ம.சா.ஆ.4	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை	நகல்
ம.சா.ஆ.5	1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்று	நகல்
ம.சா.ஆ.6	மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை	நகல்
ம.சா.ஆ.7	1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனரின் ஓட்டுனர் உரிமம்	நகல்
ம.சா.ஆ.8	மனுதாரரின் காயச்சான்று	நகல்
ம.சா.ஆ.9	மனுதாரரின் மருத்துவ பில்கள்	அசல்

<u>நீதிமன்ற சான்றாவணம் :</u>

வ.எண்	ஆவணம்	தன்மை
நீ.ம.சா.ஆ.1	மனுதாரரின் ஊனச்சான்றிதழ்	அசல்

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:</u> இல்லை

S VIPICEE Digitally signed by S VIPICEE Date: 2025.09.10 13:21:58 -0800

மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
சிறப்பு சார்பு நீதிபதி, தருமபுரி.